குன்னுடையாசாமி சரி என்று, மேழியை கையில் பிடித்து மூன்று விளாவோட்டி பெரிய வீட்டுக் கவுண்டரிடம் கொடுத்தார்.

பெ.கவுண். 'சாமி! இனி நாங்கள் ஏர் உழுகிறோம், நீங்கள் தானியம் விதையுங்கள்.'

குன்னுடையாசாமி தானியத்தை மடியில் போட்டு, வடக்கு முகமாய் நின்று, மாயவனை நினைத்து விதைக்கு முன், ஒருவருக்கும் தெரியாமல் மாயவர், ஓடி வந்து தானியத்தை எடுத்து வடக்குத்தலமாரில் தெற்கு முகமாக நின்று, 'சித்திகார பங்காளிகள், வறுத்த சோளத்தையா கொடுத்தார்கள்' என்று மாயவர் — 'வறுத்த சோளம் போட, வர்ணமுத்து விளையவேணும், பொரித்த கொல் போட, பொன்முத்து விளையவேணும்.' என்று, மூன்று கை தானியம் அள்ளி விதைத்தார். பின், புறப்பட்டு பால் கடல் போய் சேர்ந்தார்.

குன்னுடையாக் கவுண்டர், சோளம் ஒரு பக்கம், கொல் ஒரு பக்கம் விதைத்து, எல்லாம் முடிந்தும் ஆயிரம் ஏர்மாடுகளும், குன்னுடையாக் கவுண்டர், எல்லோரும் ஊருக்கு புறப்பட்டார்கள்.

பாட்டு.,

"சாமியும் முன் நடக்க முன் நடக்கவே.
கவுண்டர்களும் பின் தொடர்ந்தார் பின் தொடர்ந்தார்
ஆண்டவனார் முன் நடக்க முன் நடக்கவே
கவுண்டர்களும் பின் தொடர்ந்தார் பின் தொடர்ந்தார்"

செல்லாத்தா கோவில் அருகில் எல்லோரும் வரும்போது, தாமரை எதிர் பார்த்துக் கொண்டு இருந்தாள். எல்லோரும் வந்து தாமரையை பார்த்து, 'சாமி! இது, யார்?' என்று கேட்டார்கள்.

கு.சாமி. 'அப்பா! அவள் தான், என் மனைவி தாமரையாக் கவுண்டிச்சி.' கவுண்டர்கள் எல்லோரும் தாமரையை நமஸ்காரம் செய்தார்கள்.

தாமரை. 'கவுண்டர்களே! மங்களம் உண்டாகட்டும்! பெரிய வீட்டுக் கவுண்டரே! நீங்கள் எல்லோரும் எனக்கு, ஒரு உபகாரம் செய்யுங்கள்.

கவுண்டர் களே/நான், இப்போது செல்லாத்தா கோவிலில் சமையல் செய்து கொண்டு இருக்கிறேன், (சமைத்துச் செய்வது) எனக்கு தங்கூட சன்னதியில்/சுத்தமில்லை, ஆகையால், என் மாமனார் இருக்கும் காலத்தில், கோவிலுக்கு மேல்புரம், அரண்மனை கட்டியிருந்தார்களாம். சதிகார பங்காளிகள், அதை இடித்து சமமாக நிரவி, ஆமணக்கங் கொட்டையை அள்ளி விதைத்து விட்டார்களாம், இப்போது நாங்கள் இருக்க அதே இடத்தில் ஒரு வீடு கட்ட வேண்டும் நீங்கள் எல்லாம் அதற்குவேண்டிய சாமான்கள் கொண்டு வந்து, எனக்கு ஒரு கூரை வீடு கட்ட, உதவி செய்யவேண்டும்.'

கவுண்டர்: 'சரி/நாங்கள் (கவுண்டர்கள்), எட்டு நாளுக்குள் கட்டி விடுகிறோம்' என்று ஊர் போய் சாமான்கள் கொண்டு வந்து கட்டி முடித்தார்கள். பெரிய வீட்டு கவுண்டர் தாமரையிடம் வந்து, 'அம்மணி/நல்ல நாள் பார்த்து, அந்த வீட்டுக்கு குடி போங்கள்,' என்று சொல்லி விட்டு, கவுண்டர்கள் அணியப்பூர் சென்றார்கள். தாமரை நல்லநாள் பார்த்து, திங்கள் கிழமை சிவன் பிறந்த நாள், சந்திரன் தேவி சூரியன் கிழம்பியதும், புது வீட்டுக்கு போய் பால் பொங்கி, பின் சாதம் சமைத்து சாப்பிட்டு, சந்தோசமாய் இருந்தார்கள்.

பாட்டு,,

"மாதமூன்று மழை பெயும்
அங்கு வருஷமொரு கல்மாரி
ஆனகட்டிதாம் பாரும் இனி
அழகு பொன்னி வளநாடு"

வசனம்

'கட்டுக் களங்காணும் கருதுளிர்க்க நெல் காணும்'

குன்னுடையாக் கவுண்டர், செல்லாத்தாளுக்கு நூறை முடித்து விட்டு, சோளம் முளைத்து விட்டதா என்று பார்த்துவர காட்டுக்குச் சென்றார். போய் பார்க்கும் போது, 5 நாள் ஆகியும் ஒரு சோளம் கூட முளைக்கவில்லை; அருகில் பங்காளி தன் சோளம் போட்டிருந்த பூமியில், பயிர் நன்றாக வளர்ந்து செழிப்பாக நின்றது, குன்னுடையா சாமி வீட்டுக்குத் திரும்பி வந்தார்.

தாமரை. 'நாதா! சோளம், முளைத்து விட்டதா?'

கு.சாமி. 'பெண்ணே! இன்னும், ஒரு சோளம் கூட முளைக்கவில்லை,' என்று சாப்பிட்டு, தாம்பூலம் போட்டு உட்கார்ந்தார். இப்படியாக ஒரு வாரம் சென்றபின். மறுபடியும் போய் பார்க்கலாமென்று, காட்டுக்கு போய் பார்க்கும் போது, தூரத்துக்கு ஒரு பயிர் முளைத்து இருந்தது. இப்படியாகச் சிறியாக 30 நாள் சென்றதும், சோளப்பயிர் காடு நிறைய முளைத்து விட்டது, என்று போய் குன்னுடையா சாமி பார்த்து விட்டு வீட்டுக்கு வந்ததும்.

தாமரை. 'நாதா! இப்போது, சோள முளைத்து விட்டதா?'

கு.சாமி. 'பெண்ணே, என்ன வருத்த சோளத்தை வாங்கி வந்து விட்டான், முளைக்காது என்று சண்டை பிடித்தாயே? இன்று போய் பார் நம்மளுக்கும் நான்கு மொட்டா ஆகும்.'

தாமரை. 'நாதா! மாதம் மூன்று மழை பெய்ததால், நன்றாக முளைத்து விட்டது, ஆனால் நல்லா வளர்ந்து நாட்டை விடாது.'

கு.சாமி. 'சரி, பார்க்கலாம், பெண்ணே!'

பாட்டு,,

"அப்படியே நல்லதென்று இனி
அன்புடனே நடக்குது பார்.
நாளொரு நாள் பொழுதொரு நாள்
நடக்குது பார் நல்மருவம்."

---

இப்படி நடந்து வரும் காலத்தில், பங்காளிக் கவுண்டர்கள் வந்து, காட்டை பார்க்கும் போது 'குன்னுடையாக் கவுண்டனுக்கு நாவு மொடா விளையும் போல் இருக்கிறது, சரி இருக்கட்டும், இன்று நம் மாடுகளை விட்டு மேய்த்து விடுவோம்' என்று அதிகாரபங்காளிகள் பேசியதை, மாயவர் பார்த்து.

மாயவர்: 'ஆகா! நாம் கொடுத்த வரத்தில் குறை வந்து நேர்ந்து விட்டது,
தந்த வரத்தில் ஒரு குறை நேர்ந்து விட்டது,
நாம் போய் மாது காக்க வேண்டும்' என்று,
கருடவாகனமேறி உடனே வந்து சேர்ந்தார்.
அன்று பொழுது விடிந்ததும் பங்காளிகள் மாடுகளை ஓட்டி வந்து, வெள்ளாமையில் விட்டார்கள்.
அப்போது மாயவர் ஒருவருக்கும் தெரியாமல், விபூதியை வீசி ஒவ்வொரு மாட்டுக்கும் வாய்க்கூடை பூட்டி விட்டார். அதனால், மாடுகள் பயிர்களை மேயமுடியவில்லை, பங்காளிகள் கொஞ்சநேரம் சுற்றி மாடுகளை ஓட்டிக் கொண்டு, தங்கள் வளநாடு சென்றார்கள்.

பாட்டு,,

"இந்தப் பிரகாரம் நடக்குது அதிகாரம்
அப்படியே நல்லதென்று அன்புடனே
நடக்குது பார்
நாளொரு நாள் பொழுதொரு நாள்
நடக்குது பார் நல்மருவம்.
செங்கோல் அதிகாரம் இனி
செலுத்திப்பட்டம் ஆளுகிறார்"

---

வசனம்

காலம் பனி பெயும் பொன்னி வள நாட்டில், கருகு சம்பா நெல் விளையும்.
மீரு பனி பெயும், மிளகு சம்பா நெல் விளையும்.

குன்னுடையாக்கவுண்டர் காலையில் எழுந்து காசிக்கரை சென்று நீராடி வந்து செல்லாத்தாளுக்கு அரு ஆணை, குரு ஆணை, 58 லிங்க ஆணையும் முடித்து விட்டு, வீட்டுக்கு வந்து கொங்காளை கம்பளியை தோளில் போட்டு, கொப்பி கட்டிய கவையை எடுத்துக்கொண்டு காட்டுக்குப் போய் வெள்ளாமையை பார்க்கும் போது, பயிர்கள் சாய்ந்து கிடந்தது நாலு பக்கமும் போய் பார்த்தார், எல்லா இடத்திலும் அதே மாதிரி இருந்தது, 'இரவு நேரத்தில் ஏதோ மாடுகள் வந்து மேய்ந்து விட்டது' என்று நினைத்து வீட்டுக்கு வந்தார்.

தாமரை. 'நாதா, பயிர்கள், புடை கட்டிவிட்டதா?'

கு.சாமி. 'பெண்ணே! புடை கட்டிவிட்டது, நேற்று இரவு ஏதோ மாடுகள் தவறி வந்து மேய்ந்து விட்டது, அதனால், பயிர்களை கடிக்கவில்லை பயிர்கள் கீழே சாய்ந்து விட்டது.'

பாட்டு,,

"காலம் பனி பெயும் அங்கு பனிப் பெயும்
கருதுளிர்க்க நாட்டிலே நெல் காணும்
அங்கே நெல் காணும்
மீரு பனிப் பெயும் அங்கு பனிப் பெயும்
மிளகு சம்பா நாட்டிலே நெல் காணும்
ஆனைகட்டி கார்விளையும் அங்கு கார்விளையும்
அழகு பொன்னி வள நாடு அது வள நாடு"

வசனம்.

மண்போட்டு பொன் விளையும் மகுட பொன்னி வளநாடு, திருக்காம்புலியூர் சிறந்த பொன்னி வளநாடு.

மறுபடி ஒருவாரம் கழித்து, குன்னுடையா சாமி காட்டைப் போய் சுற்றி பார்க்கும் போது, 15 நாள் ஆகியும் ஆட்டைகள் வெளியில் வராமல் இருப்பதை பார்த்து, மனம் தளர்ந்து வீட்டுக்கு வந்தார்.

தாமரை. 'நாதா! இன்று போய் பார்த்தீரே, ஆட்டைகள் வெளியில் வந்து விட்டதா?'

கு.சாமி. 'பெண்ணே! முன் போலவே அப்படியே இருக்கிறது, இன்னும் ஆட்டைகள் வெளியில் வரவில்லை.'

தாமரை. 'நாதா! சோளம் போட்டு மூன்று மாதம் ஆகி விட்டது, இன்னும் புடைக்கட்டவில்லையா, நாதா?'

கு.சாமி. 'பெண்ணே! இன்னும் காட்டை வந்து பார்க்கவே இல்லை, நாளைக்கு நாம் இரண்டு பேரும் போய் பார்க்கலாம்.' மறுநாள், இருவரும் புறப்பட்டு போனார்கள்.

பாட்டு,

"பத்தாவும் முன் நடக்க இனி
பத்தினியும் பின் தொடர்ந்தாள்.
அண்டவனும் முன் நடக்க இனி
அருகிலியாள் பின் தொடர்ந்தாள்
ஆனைக்கல்லு காடு தேடி இனி
கூட்டி வந்தான் தாமரையை."

இருவரும் காட்டுக்கு வந்து, நாலு பக்கமும் சுற்றி பார்த்து வலது புறம் வந்து நின்றார்கள், அப்போது தாமரை ஆட்டை ஏன் வெளியில் வராமல் இருக்கிறது பார்க்கலாமென்று நடுகாட்டுக்குச் சென்று, ஒரு ஆட்டையை சோகையை நீக்கி பார்த்தாள். அதில்-

முத்து, நவரத்தினம், கோமேதகம், புஸ்பராகம், வைடூரியம், பவளம். இவைகள் நிறைந்து இருப்பதை பார்த்து தாமரை, 'நாதா! இங்கு வாருங்கள், இந்த கூட்டையை பாருங்கள். குன்னுடையாசாமி போய் பார்த்து, 'பெண்ணே, வருத்த சோளம் விளையாது என்று சொன்னாயே? இப்போது பார் முத்து வைடூரியங்களாக விளைந்து விட்டது.'

தாமரை. 'இவை எல்லாம், அந்த பரந்தாமனுடைய அருள்.'

கு.சாமி 'பெண்ணே சரி, இதை எப்போது அறுக்கலாம்?'

தாமரை. 'நாதா! பகலில் ஆள் விட்டு, இதை அறுத்தால், எல்லோருக்கும் தெரிந்து, நம்மை கொன்று விட்டு அவைகளை கொண்டு போய் விடுவார்கள். ஆகையால், நீங்கள் அணியனூர் சென்று, பெரிய வீட்டுக்கவுண்டரிடம் சொல்லி, வீட்டுக்கு ஒருவர் வந்து இதை அறுத்து போட்டு விட்டு போகச் சொல்லுங்கள், மறுபடி, நாம் இருவரும் மேக்கிலை வெட்டிக் கொள்ளலாம், சரி வாருங்கள் கொல்லுச் செடியையும் போய் பார்த்து விட்டு போகலாமென்று, கொல்லுச்செடியை போய் பார்க்கும் போது. கொல்லுக்காயில் பூராவும் நவரத்தினங்களாக இருந்தது, பார்த்து விட்டு இருவரும் வீட்டுக்கு புறப்பட்டார்கள்.

பாட்டு,,

"ஓணைக்கல்லு மேடு விட்டு மேடு விட்டு
வருகிறாரே இரண்டு பேரும்
சாமியும் முன்நடக்க முன்நடக்கோ
தாமரையும் பின்நடந்தாள் பின்நடந்தாள்
அன்னவனும் முன்நடக்க முன்நடக்கோ
அருங்கிளியாள் பின்தொடர்ந்தாள் பின்தொடர்ந்தாள்

— — — — — — — — — — — —

இருவரும் வீட்டுக்கு வந்து, குன்னுடையார் சாப்பிட்டு, தாம்பூலம் போட்டு, 'பெண்ணே! நான், அணியப்பூர் சென்று வருகிறேன்.' என்று புறப்பட்டார்.

பாட்டு:

"அணியப்பூர் தேடியல்லோ தேடியல்லோ
அதிவிரைவாய் வருகின்றாரே சாமியுந்தான்
அன்னக்கண்டால் அன்னநடை அன்ன நடை
ஆள்மனைந்துதான் குதிரைவேகம் வருகின்றாரே
மேடுகண்டா மெல்லநடை மெல்ல நடை
பள்ளங்கண்டா பருத்துநடை வருகின்றாரே"

குன்னுடையா சாமி அணியப்பூர் வந்து, பெரிய வீட்டுக் கவுண்டரைப் பார்த்து, 'கவுண்டரே! திங்கள் கிழமை, நீங்கள் வீட்டுக்கு ஒருவர் வந்து, திட்டை அறுத்துப் போட்டு வாருங்கள்' என்றார்.

பெ. கவுண். 'சாமி! நம்ம காட்டில், வெள்ளாமை ~~[illegible]~~ எப்படியிருக்கிறது?'

கு. சாமி. 'ஏதோ! சோளம், நாலு மொடா ஆகும்; கொள்ளு, ஒரு மொடா ஆகும்; நீங்கள் திங்கள்கிழமை வந்து சேருங்கள்.'

பெரிய கவு. 'சரி, நல்லது! அப்படியே வருகிறோம்.'

கு. சாமி. 'சரி, கவுண்டர்களே! நான் போய் வருகிறேன்' என்று புறப்பட்டு, பொன்னிவள நாடு வந்து சேர்ந்தார்.

தாமரை. 'நாதா! கவுண்டர்கள், என்ன சொன்னார்கள்?'

கு. சாமி. 'பெண்ணே! திங்கள் கிழமை, எல்லோரும் வருவதாகச் சொன்னார்கள்.'

தாமரை. 'சாமி! நல்லது, சாப்பிட வாருங்கள்.' குன்னுடையா சாமி எழுந்து சாப்பிட்டு, சந்தோசமாக இருந்தார்கள்.

பாட்டு

"இந்தும் பிரகாரம் நடக்குது பார் அதிகாரம்
அப்படியே நல்லதென்று அன்புடனே நடக்குதுபார்
நாளொருநாள் பொழுதொருநாள்
நடக்குது பார் நல்பருவம்
மாதம் மூன்று மழை பெய்யும்
பொன்னிவள நாட்டில் நடக்குது அதிகாரம்"

வசனம்

குன்றுடையா சாமி, திங்கள் கிழமை காலை வெள்ளி உதிக்குமுன், வெண்கோழி கூவுமுன் எழுந்து காசி கரை சென்று, நீராடி செல்லாத் தாருக்கு பூஜை முடித்து, வீட்டுக்கு வந்து, கவுண்டர்களை எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார். சிறிது நேரத்தில், அண்ணமார் கவுண்டர்கள் எல்லோரும், வந்து சேர்ந்தார்கள். 'சாமி, எல்லோரும் வந்து விட்டோம், புறப்படுங்கள் போகலாமென்றார்கள்.'

பாட்டு

"சாமியும் முன் நடக்க முன் நடக்கவே
கவுண்டர்களும் பின் நடந்தார் பின் நடந்தார்
தாமரையும் முன் நடக்க முன் நடக்கவே
ஆயிரம் பேர் பின் தொடர்ந்தார் பின் தொடர்ந்தார்
ஒருக்கல்லு காடு தேடி காடு தேடி
வருகிறாரே எல்லோரும்"

காட்டுக்கு வந்து சேர்ந்ததும், ஆயிரம் கவுண்டர்களும் விளைவுக்கு இரண்டு பேர் நின்று, குட்டை அறுத்து கட்டி பாளையில் கொண்டு போய் போட்டார்கள், பின் கொல்லுத் தழையையும் பிடுங்கி பாளையில் கொண்டு போய் போட்டார்கள். உச்சி உருவம், மத்தியான நேரம் வேலை முடிந்ததும் கவுண்டர்கள் குன்றுடையாசாமியிடம் விடை பெற்று, ஊர் போய்

சேர்ந்தார்கள், அவர்கள்
போனபின், குன்னுடையா சாமியும், தாமரையும்,
கூடையை எடுத்து பாறையில் வடக்கு முக
மாக உட்கார்ந்து-

'மண்பிடித்துப் போட்ட மாயவனே!
உருபிடித்துப்போட்ட உடையவனே!
ஆபத்பாந்தவா அனாதரட்சகா! நாங்கள்
பேரும், இவ்வளவு கதிரையும் வெட்
டமுடியுமா? எங்களுக்கு துணையாக வரவேண்
டும் கோவிந்தா!' என்று மாயவனை நினைத்து,
கதிரை வெட்டினார்கள். இதை மாயவர் பார்
த்து, அடடா! நாம் கொடுத்த வரத்தில் குறை
யில்லாமல் இருக்கிறது; கதிரை வெட்
டமுடியாமல், நம்மை அழைக்கிறார்கள்;
என்று, மாயவர் கருடவாகனமேறி புறப்ப
ட்டார்.

பாட்டு..

"பால்கடல் விட்டுமல்லோ
வருகிறாரே மாயவரும்
பூலோகம் தேடியல்லோ
மெய்யமா வருகிறாரே.
பொன்னுவளநாடு தேடி
வருகிறாரே எம்பெருமாள்"

மாயவர் சேனைக்கல் மேடு வந்து, ஒருவரு
க்கும் தெரியாமல் நின்று, குன்னுடையாக்கவு
ண்டரும் தாமரையும், இரண்டு பேரும், இரண்டு
கதிரை வெட்டி கூடையில் போட்டால், மாயவ
ர் விபூதியை வீசும் போது ஐயாயிரம் கதிர்
அந்தரத்தில், அறுந்து விழுந்தது. அரை நாழிகைக்கு
ள், அவ்வளவு கதிரும் வெட்டுண்டு பாறையில்
குவிந்தது. பின், கொல்லுச் செடியையும் பாறையி
ல் உதறிவிட்டு, இரண்டு பேரும் கூடையெடுக்க

கொல்லுக்கரையை அடிக்கும் போது, மாயவர் விபூதியை வீசியவுடன், ஒருவருக்கும் தெரியாமல் ஆயிரம் தடிகள் அடிப்பட்டது, எல்லாம் அடித்து முடிந்தவுடன்.

தாமரை. 'நாதா! என் மாமனூர் இருந்த காலத்தில், யானை கொண்டு தாம்படித்தாராம், நீங்களும் சோழதேசம் சென்று, அரசரிடம், யானையைக் கேட்டு வாங்கி வாருங்கள், நாமும் யானைகட்டி தாம்படிக்கலாம்.'

கு.சாமி. 'சரி, பெண்ணே! போய் வருகிறேன்' என்று புறப்பட்டார்.

பாட்டு.

"பொன்னிவள நாடுவிட்டு நாடுவிட்டு
சோழதேசம் வருகுறேனே வருகுறேனே
காடான காடுவிட்டார் காடுவிட்டார்
கட்டப்பொன்னி சோலைவிட்டார்
சோலைவிட்டார்

இஞ்சி மணக்கும் வனம் மணக்கும் வனம்
எலுமிச்சங்காய் காய்க்கும் வனம்
காய்க்கும் வனம்"

சோழதேசம் வந்து, குன்னுடையா சாமி அரசரை கண்டு நமஸ்காரம் செய்தார்.

அரசர். 'குன்னுடையாக் கவுண்டா! மங்களம், உண்டாகட்டும்! வெள்ளாமை எல்லாம் எப்படி இருக்கிறது?'

கு.சாமி. 'ஏதோ! தங்களுடைய புண்ணியத்தில், நாலு மொடா தோளம் ஆகும், அரசே! என் தகப்பன் இருந்த காலத்தில் யானைகட்டி தாம்படித்தாராம், அதுபோல், என் மனைவி யானைகட்டி தாம்படிக்க வேண்டுமென்று சொல்கிறாள். ஆகையால், தங்களிடம், யானையை வாங்கி போகலாமென்று வந்தேன்.'

அரசர். 'குன்னுடையாக் கவுண்டா! உன் மனைவி, நல்ல திறமை உள்ளவள் போல் இருக்கிறது.'

கு.சாமி. 'அரசே! என் மனைவி திறமை சாலிதான்.'

அரசர். 'ஆமாம்! நீ, அப்பாவி, அவள் அப்படி இருப்பது நல்லதுதான், அடே சேவகா! யானைப்பாகனை பட்டத்து யானையை கொண்டு வரச் சொல்.'

சேவகர் அரசே! நல்லது, என்று பாகனிடம் சென்று யானையை கொண்டு வரச் சொன்னான்.

அரசர். 'குன்னுடையாக் கவுண்டா! தாம்படித்து விட்டு, யானையை கொண்டு வந்து விட்டுவிட்டு போ.'

கு.சாமி. 'அரசே! நல்லது, என்று யானையை பிடித்துக் கொண்டு புறப்பட்டார் குன்னுடையா சாமி.

பாட்டு,,

சோழதேசம் விட்டுமல்லோ விட்டுமல்லோ
பொன்னிவளநாடு வாரார் நாடு வாரார்
மண்போட்டு பொன்விளையும் பொன்விளையும்
மகுட பொன்னிவளநாடு நாடு வாரார்.

- - - - - - - - - -

குன்னுடையாசாமி யானையை பிடித்துக் கொண்டு ஜோதிக்கல் காடு வந்து 'பெண்ணே! யானை கொண்டு வந்து விட்டேன்.'

தாமரை. 'நாதா! நல்லது, இனி தாம்படியுங்கள்.'

குன்னுடையா சாமி பாறையில் கதிர்களை பரப்பிவிட்டு, யானையை வடக்கு முகமாக நிறுத்தி, மாயவரை நினைத்து ஓட்டினார், மூன்று சுற்று ஓட்டிய பின், நிறுத்தி சக்கைகளை எல்லாம் விலக்கிவிட்டு, மறுபடி மூன்று முறை ஓட்டி வந்து யானையை நிறுத்திவிட்டு, தானியங்களை கூட்டி குவித்து, 'பெண்ணே! நீ, கூடையில் அள்ளிக் கொடு, நான் தூற்றுகிறேன்' என்று மாயவரை நினைத்து அதில் கூடையை வைத்து, தூற்றும் போது மாயவர் கிருபையில், அந்நேரத்தில் ஆயிரம் கூடை தூற்றியது.

எல்லாம் தூற்றி முடிந்ததும், ஒன்றாக குவித்து மல்லாண்டார் போட்டு ராசிக்கால் கட்டினார்கள்.

தாமரை. 'நாதர்/யானையை கொண்டு போய் விட்டு விட்டு, அரசர் தங்கவள்ளத்தை வாங்கி வாருங்கள்.'

பாட்டு,,

"அப்படியே நல்லதென்று நல்லதென்று
அன்புடனே வருகுறாரே வருகுறாரே
பொன்னிவள நாடுவிட்டு நாடுவிட்டு
சோழதேசம் வருகுறாரே சாமியுந்தான்."

குன்னுடையா சாமி சோழதேசம் சென்று, அரசரை கண்டு நமஸ்காரம் செய்து, 'சாமி! யானையை கொண்டு வந்து விட்டேன்.'

அரசன். 'சரி, நல்லது! சோளமெல்லாம் தாம்படித்து விட்டாயா?'

கு.சாமி. 'அரசே/எல்லாம் முடிந்தது, தங்களுடை தங்கவள்ளம் வேண்டும் அளந்து விட்டு, கொண்டு வந்து தருகிறேன்.'

அரசன். 'சரி, நல்லது! அடிமைகளே/முத்திரை வள்ளத்தை கொண்டு வந்து கொடுங்கள்.'

குன்னுடையா சாமி, வள்ளத்தை வாங்கிக்கொண்டு புறப்பட்டார்.

பாட்டு,,

"சோழதேசம் என்சாமி விட்டுமங்கே.
பொன்னிவள என்சாமி நாடு வாறார்
சிங்கம் உறங்கும் வனம்
சிறு புலிகள் தூங்கும் வனம்
ஆனை உறங்குவனம் அடகோட்டான்
என்னத்துர தூங்கும் வனம்."

ஓணக்கல் காட்டுக்கு வந்து சேர்ந்து/பெண்ணே/சுடையை பிடி, நான் அளந்து போடுகிறேன்

எவ்வளவு ஆகும் என்று பார்க்கலாம், யாரா வது பிச்சைக்காரர்கள் இடத்தில் வந்தால், பார்த்துச் சொல், ராகியோ, சோளமோ, ஏதுபடி கொடுப்பதற்கு, அப்படி யாராவது வந்தால், உடனே ராகியை போட்டு விடலாம் என்று சொல்லி, குன்னுடையாக் கவுண்டர் வடக்கு முகமாக உட்கார்ந்து, தெய்வசபையை நினைத்து, 'பொலிவளர, ஒன்று, இரண்டு, மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது அப்படியாக அளந்து கொண்டிருக்கும் போது. மாயவர், 'குன்னுடையாக்கவுண்டன், தருமம் கொடுப்பானோ? மாண்டானோ? என்று வலதுபுறம் காட்டில் ஆடுமாடு மேய்க்கும் மையனை எல்லாம் கூப்பிட்டு, மையனுக்கெல்லாம் நாமம் போட்டு, சங்கு செயகண்டி கையில் கொடுத்து, இப்படியாக துலசி எடுத்து, தொண்ணூற்று ஒன்பது மையனை சேர்த்துக் கொண்டு மாயவருடன், ஆவிரம் தாசனைக வடிவெடுத்து, எல்லோரையும் கூட்டிக் கொண்டு, பண்ணை உள்ளதிசையை நோக்கி வந்தார்.

தாமரை வடக்கிலிருந்து பரதேசிகள் வருவதை பார்த்து மாயவர் வருகிறார் என்று மனதில் நினைத்து, இன்பம் குளிர்ந்து, அகதோஷம் பூரித்து, தாசர்கள் அருகில் வந்ததும், 'நாதா! பாரேலோ, பரதேசிகள் வருகிறார்கள் என்றாள்.

கு.சாமி. 'பெண்ணே! இங்கு வந்து விட போகிறார்கள், அப்படியே போகச் சொல்.

அதனால், தாமரை பரதேசியை நோக்கி, 'சுவாமி! வாருங்கள்' என்று கூப்பிட்டாள். குன்னுடையாசாமிக்குக் கோபம் வந்து, 'அடி, கூடப்போட்ட முண்டே! நான், அப்படியே போகச் சொல்லி

சொல்லுகிறேன், நீ, இங்கே வாருங்கள், சுவாமி! என்று கைப்பிடிக்கிறார் என்று குன்னுடையா சாமிக்கோபம் வந்து கவளையை எடுத்து ஓங்கினார்.

தாமரை. 'நாதா! பொறுங்கள், நீங்கள் ஏன் இப்படி ஆத்திரப்படுகிறீர்கள்? எல்லாம், அவர் கொடுத்த பிச்சை.'

கு.சாமி. '~~[struck out]~~ அந்த, தட்டை வாய் தாசனை கொன்றுதான், 3.மாதமாக கஷ்டப்பட்டு, நானல்லவா, சம்பாதித்தேன்.' இதற்குள், தாசர்கள் ஆயிரம் பேரும் வந்து, பாறையில் நின்று கொண்டார்கள்.

கு.சாமி 'ஒருவரா, இல்லை இருவரா, ஒரு வள்ளம் கொடுப்பதற்கு, ஆயிரம் பேர் வந்து நிற்கிறீர்கள், எவ்வளவு பேருக்கு கொடுப்பது?' என்று குன்னுடைய ராஜமன்னன், கோடையிடி மணி வேந்தன், கோபம் வந்து வாசியில் உட்கார்ந்து, வள்ளத்தை கையில் எடுத்து, 'பெண்ணே! பிடி, யார், யாருக்கு போட வேண்டுமோ, போடு' என்று தானியத்தை அளக்கத் துடங்கினார்.

தாமரை இரண்டு வள்ளம் வாங்கி, பெரிய தாசனுக்கு போட்டாள். மறுபடி, எல்லா தாசனுக்கும், ஆளுக்கு ஒரு வள்ளம் போட்டார்கள், எல்லோருக்கும் போட்டு விட்டு பார்க்கும்போது, மீதி ஐந்து வள்ளத் தானியம்தான் இருந்தது, 'கூடப்போட்டமுண்டே! நான், இவ்வளவு தானியத்தையும் கொண்டு, வெகு காலம் பிழைக்கலாம் என்று இருந்தேன், எல்லாம் வகுத்து, தாசனுக்கு கொடுத்துவிட்டாய் சண்டாளி, என்று குன்னுடையா கவுண்டர் தாமரையை சிண்டை பிடிக்கவும், ஆயிரம் தாசனும் மாய மாய் மறைந்து விட்டார்கள்.

குன்னுடையாசாமிக்கு கோபம் வந்து
வள்ளத்தை கையில் எடுத்துக்கொண்டு சோ
ழதேசம் சென்று, வள்ளத்தை தண்ணீரில் கொடு
த்து விட்டு திரும்பினார். தாம் போனபிற
கு, தாமரை நீதி இருந்த தானியத்தை வை
யில் போட்டு எடுத்து, தலையில் வைத்து
வீட்டுக்கு புறப்பட்டாள், இவர்கள்
இருவரும் வீட்டுக்கு வருமுன், ஆயிர
ம் தாசர்களும், ஆயிர வள்ள முத்தையும்
கொண்டு வந்து, வீட்டுக்குள் கொட்
டிவிட்டு போய் விட்டார்கள். கவுண்டர்
சோழதேசத்திலிருந்து வீடுவந்து சேர்
ந்தார், வந்தது கோபத்தில் கதவைதிறந்
தார், கதவைதிறக்க முடியவில்லை அதற்குள்,
தாமரையும் வீடுவந்து சேர்ந்தாள்.

கு.சாமி. 'பெண்ணே! ஏன் கதவைதிறக்க முடியவில்லை?
குறுந்து, கீழே இறங்கிவிட்டது போல்
இருக்கிறது, வா, இருவரும் சேர்ந்து,
கதவைமேலே தூக்கலாம்' என்று
இருவரும்சேர்ந்து கதவை தூக்கியபடி
தள்ளும் போது, ஜல, ஜலவென்று முத்து
க்கள் கதவுசந்தில் வெளியில் வந்தது.
குன்னுடையாசாமி முத்துக்களை கண்
ணில் பார்த்து. 'பெண்ணே! தாசன், ஆயிரம்
பேரும், வாங்கிய முத்து எல்லாம், இங்கு
கொண்டு வந்து போட்டு விட்டுபோய்
விட்டார்களே! ஏன், அவர்கள் கொண்டு
போகவில்லை, என்ன காரணம்?'

தாமரை. 'நாதா! அவர் கொடுத்த திரவியத்தை,
அவர் கொண்டு போகமாண்டார், உங்
களுக்கு தர்மசிந்தனை இருக்கிறகாரண

பார்த்திருக்கிறார், அவ்வளவுதான்.

நாதா! நானும், தாங்கள் தருமம் செய்வீரா, இல்லையா என்று பார்த்தேன்.

பாட்டு,,

"செங்கோலு அதிகாரம் இனி அதிகாரம்
செலுத்திப்பட்டம் நாட்டிலே ஆளுகிறார்
துங்க விரல் அதிகாரம் இனி அதிகாரம்
தனிச்சிப்பட்டம் நாட்டிலே ஆளுகிறார்
மாதம் மூன்று மழைபெயும் அங்கு மழைபெயும்
வருஷமொரு நாட்டிலே கல்மாரி இனி கல்மாரி
இந்த நல்ல பிரகாரம் இனி பிரகாரம்
நடக்குது பார் பொன்னிவள நாட்டில் அதிகாரம்"

அன்னக்கொடி தாமரை, அரி வள்ள தேவி, காரளன் தேவி, கற்புடைய விளாமாது. ஒருநாள், ஒரு பொழுது, ஒரு யோசினை மனதில் நினைத்தாள் அதாவது, நம் மாமனார் இருக்கும் காலத்தில், இந்த இடத்தில் அரண்மனை கட்டியிருந்தாரும், நம்மளுக்கு இப்போது, ஏழு கோடி திரவியம், மாயவர் அருளால் கிடைத்து இருக்கிறது, ஆகையால், நாம் மாமனார் கட்டியிருந்த அரண்மனையை விட, நல்லதாக கட்ட வேண்டும் என்று, மாயவனை நினைத்தாள். பரந்தாமன், அதாவது, தாமரை வீடு கட்ட நினைத்து, நம்மளை அழைக்கிறாள் என்று கருட வாகனம் ஏறி புறப்பட்டார்.

பாட்டு,,

"பால்கடல் என்சாமி விட்டுமங்கே
பரந்தாமன் என்சாமி வாறாரே
ஆலோகம் என்சாமி தேடியல்லோ
மய்யமா என்சாமி பறக்கிறாரே
மண்போட்டு என்சாமி பொன்விளையும்
மகுட பொன்னி என்றத்தா நாடுவந்தார்"

மாயவர் பொன்னிவளநாடுவந்து,குன்றுடையாகவுண்டர் வீட்டில் அமர்ந்தார். குன்றுடையாசாமியும்,தாமரையும் மாயவரை நமஸ்க்காரம் செய்தார்கள்.

மாயவர்: 'சரணமென்ற பேர்களுக்கு,வரணமொருநாளுமில்லை! அம்மாதாமரை! என்ன ஏதுகாரணமாக,வரவழைத்தாய்?'

தாமரை: 'பரந்தாமா! பூபாலகா! தாங்கள் கொடுத்தபிச்சை,எனக்கு ஏழுகோடி திரவியம்இருக்கிறது,சுவாமி! என்மாமனார் காலத்தில் அரண்மனை கட்டியிருந்தாராம், அதுபோல் நாங்களும் கட்ட வேண்டுமென்று நினைத்து,தங்களை அழைத்தேன், என்மாமனார் கட்டியிருந்த இடத்தில் கட்டலாமா? அல்லது,வேறு இடத்தில் கட்டலாமா?தாங்கள்,சோதிடம் பார்த்து சொல்லவேண்டும்.'

மாயவர்: 'தாமரை! இந்த வீடு கட்டுவதற்கெல்லாம், நான் சோதிடம் பார்க்காவிட்டால்,நாட்டில் எத்தனையோ சோதிடர்கள் இருக்கிறார்கள் பார்த்திருக்கலாமல்லவா?'

தாமரை: 'சுவாமி! என்ன சொன்னீர்கள்?தங்களுடைய திருஷ்டியில் மாங்கல்யம் செய்து,எனக்கு தாங்கள் முன்னின்று திருமணம் செய்துவைத்தீர்கள், அப்படி இருக்கும் போது,எந்தகாரியமாக இருந்தாலும்,தாங்கள் இல்லாமல் முடியாது.' தாமரை இவ்வாறு சொன்னவுடன்,பரந்தாமன் இன்பம் களிந்து,இருதோளும் பூரித்து,சாலமனம் குளிர்ந்து சந்தோசப்பட்டு, தாமரை! சாவடியில் நாலு மூலைகளாக வத்தித்து,பிள்ளையார் பிடித்து வைத்து தேங்காய்பழம் உடைத்து வை!

தாமரை: சுவாமி! அப்படியே செய்து விட்டேன், மாயவர் எழுந்து, பிள்ளையார் அருகில் உட்கார்ந்து, பஞ்சாங்கத்தையும், ஜோதிட ஏட்டையும் பிள்ளையார் முன் வைத்து பூஜை செய்து, மாயவர் ஏட்டை எடுத்து, நல்ல நாள் பார்க்கிறார்.

மாயவர்: தாமரை! உன் மாமனார் கட்டியிருந்த இடம் இதுதான், அந்த இடத்தில் கட்டலாம், வருகிற வெள்ளிக்கிழமை விடிய ஐந்து நாழிகைக்கு, சந்திரன் தேவி சூரியன் கிழம்புமுன், இதே இடத்தில் பாலக்கால் போட்டு, அதன் மேல் வேலையை ஆரம்பம் செய்யுங்கள்.

---

தாமரை: சுவாமி! நல்லதுங்கோ, வெள்ளிக்கிழமை காலையில் தாங்கள் வந்து தான் பாலக்கால் போட வேண்டும்.

மாயவர்: நல்லது, தாமரை! நீ, அரண்மனை கட்டுவதாக எல்லோருக்கும் தெரிய வேண்டும், ஆகையால், அணியப்பூர் கவுண்டர்களையும், வெள்ளிக்கிழமை வரச் சொல்லி தகவல் கொடுங்கள், நான் போய் வருகிறேன் என்று மாயவர் புறப்பட்டு பால்கடல் சென்றார்.

பாட்டு

"இந்த நல்ல பிரகாரம் இனி பிரகாரம்
பொன்வள நாட்டில் நடக்குது அதிகாரம்
அப்படியே நல்லதென்று அன்புடனே நடக்குது பார்
நாளொரு நாள் பொழுதொரு நாள் இனி
நடக்குது பார் நல்பருவம் அங்கு நல்பருவம்"

தாமரை: நாதா! தாங்கள், அணியப்பூர் சென்று, கவுண்டர்களை வெள்ளிக்கிழமை வீட்டுக்கு பாலக்கால் போடுவதாக சொல்லி விட்டு, அவர்கள் வரும்போது, வீடு தவறாமல் பால் கொண்டு வரச் சொல்லி

விட்டு வாருங்கள்! குன்னுடையாசாமி, சரி, நான் போய் வருகிறேன் என்று அணியப்பூர் புறப்பட்டார்.

பாட்டு,,

"அணியப்பூர் என்னத்தா தேடியல்லோ
அதி விரைவாய் என்சாமி வாரானே
மேடுகண்டா என்னத்தா மெல்ல நடை
பள்ளங்கண்டா என்சாமி பந்து நடை"

குன்னுடையாசாமி அணியப்பூர் போய், பெரிய வீட்டு கவுண்டரை பார்த்து, பெரிய வீட்டு கவுண்டரே! நான் அண்ணனை கூட்டிக்கிறேன், அதற்கு வெள்ளிக்கிழமை காலையில் பாலக்கால் போட வேண்டும்; ஆகையால் நீங்கள் ஒருபத்து வீட்டு காரர், வெள்ளிக்கிழமை கோழி கூவையவுடன் தொரந்சம்பால் கொண்டு பொன்னி வளநாடு வந்து சேருங்கள்.

கவுண்டர்: சாமி! அப்படியே, வருகிறோம்.

குன்னுடையாசாமி, சரி நான் போய் வருகிறேன் என்று புறப்பட்டு, பொன்னி வளநாடு வந்து சேர்ந்தார். இப்படி இருக்கும் போது வெள்ளிக்கிழமை பிறந்தவுடன் சூரியன் உதிக்குமுன், மாயவர் பொன்னி வளநாடு வந்து சேர்ந்தார். அணியப்பூர் கவுண்டர்களும் வந்து சேர்ந்தார்கள். குன்னுடையாசாமியும், மற்ற கவுண்டர்களும், மாயவரை வணங்கினார்கள்.

மாயவர்: எல்லோருக்கும், மங்களம், உண்டாகட்டும்! தாமரை! ஒரு தட்டத்தில், நவதானியம் துணியில் முடிந்து வைத்து தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு எல்லாம் வைத்து, சொம்பில் தண்ணீர் எல்லாம் எடுத்துக் கொண்டு வா, குன்னுடையா கவுண்டா! ஒரு பாச்சான் கோல் ஒன்று வேண்டும் கொண்டு வா. மாயவர் சொன்ன பிரகாரம் எல்லா சாமானும் கொண்டு வந்த பின்,